முருகப்பெருமான் துணை

**மகான் குலசேகர ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.11.2023**, சனிக்கிழமை

**1.** ஞான சபை கொண்ட அரங்கா
ஞான குருவாக நின்றருளும் தேசிகா
வானவர்கள் போற்றும் அரங்கா
வள்ளலே வாழும் ஞான தேசிகா

**2.** தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் சோபகிருது தேள் திங்கள்
ஆசிபட நவதிகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 09 ம் நாள், 25.11.2023, சனிக்கிழமை)
அருளுவேன் குலசேகர ஆழ்வார் யானும்

**3.** யானும் அறிவுரை ஆசிதனை
உலகோர் நலம்பெற உரைப்பேன்
ஞானப் படைகளாக சாமானியர்களையும்
ஞான வழிகாட்டி அருளுகின்ற அரங்கன்

**4.** அரங்கன் உண்மை நெறிமுறைகளை
அறிவிப்பேன் வேதமாக ஏற்று
வரங்களாகத் தொடர்ந்து வர
வரும் மக்கள் அனைவருமே

**5.** அனைவருமே ஞானவான்களாக
ஆற்றல்மிக்க இறைபலமோடு
துணையாக குருவருள் தானும்
தொடர்ந்துவர ஞானிகளாவர்

**6.** ஆவரே அரங்கன் நோக்கம் வழி
அகிலத்தை மாற்றும் சக்தியாக
அவதாரமாக அவரவரும் தேறி
அற்புதம்பட தரும சேவை புரிவர்

7. சேவைகள் எங்கும் பரவ பெருக
செகமே தருமபலம் கூடியே
அவனிதனில் எங்கும் ஞானப் படை
அரங்கன் படைகளாக மாறியே
8. மாறியே ஞான ஆட்சிக் காலம்
மண்ணுலகம் அடையக் கூடும்
தேறியே தரும சக்தி கூடிட
தெய்வ பலமாக உலகம் தேறி
9. தேறியே ஞானிகள் கூட்டம் மிக
தெரிவிப்பேன் ஞானஆட்சி மலரும்
வறுமைக் கோடு பசிபிணி என
வதைகள் அத்தனையும் விலகி
10. விலகியே சர்வ பாதுகாப்புடன்
வினைகள் என்பதே இல்லா
கழகங்கள் எல்லாம் இணைந்து
கருணைமிக்க ஒரே அமைப்பாக
11. ஆகவே உலகமெல்லாம் வியக்க
அரங்கன் தலைமைதனை ஏற்ற
செகமாக ஞான ஆட்சிக் காலம்
செப்பிடுவேன் அரங்கனால் அமையும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–